தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர்

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25-3-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை செய்த சூரியகாந்தியை உடனே விற்கவும்

இந்தியாவில் சூரியகாந்தி மிக முக்கியமான எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒன்றாகும். சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி அடிப்படையில் எண்ணெய் வித்துப் பயிர்களில் மத்தியில் இது நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. உலகளவில் 2013-14 ல் மொத்த சூரியகாந்தி விதை உற்பத்தி 42.77 மில்லியன் டன்களாக இருக்குமென்று கணிக்கப்பட்டுள்ளது. 2012-13ல் இதன் உற்பத்தி 36.40 மில்லியன் டன்களாக இருந்தது. உக்ரைன் (26.88 சதவீதம்), ரஷ்யா (23.37 சதவீதம்), ஐரோப்பிய ஒன்றியம் (19.93 சதவீதம்), அர்ஜென்டினா (7.10 சதவிதம்), சீனா (5.72 சதவீதம்), துருக்கி (3.27 சதவீதம்), மியான்மர் (1.87 சதவீதம்) மற்றும் இந்தியா (1.87 சதவீதம்) ஆகிய நாடுகள் சூரியகாந்தி உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இந்தியாவின் 2013-14 க்கான உணவு எண்ணெய் இறக்குமதியில் பாமாயில் 8.4 மில்லியன் டன்கள், சோயா எண்ணெய் 1.3 மில்லியன் டன்கள், சூரியகாந்தி எண்ணெய் 1.2 மில்லியன் டன்கள் மற்றும் இதர உணவு எண்ணெய் 10,000 டன்கள் இறக்குமதி செய்யப்படும் என இறக்குமதி முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் 2013-14 ஆண்டு கரீப் பருவத்தில் சூரியகாந்தி விதை உற்பத்தி 1.85 இலட்சம் டன்கள் ஆகும். இது 2012-13ல் 1.50 இலட்சம் டன்கள் ஆக இருந்தது. கர்நாடகா(81 சதவீதம்), மகாராஷ்டிரா(10.81 சதவீதம்), ஆந்திரப்பிரதேசம் (5.41 சதவீதம்) மற்றும் தமிழ்நாடு (2.70 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் சூரியகாந்தி உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சந்தைத் தகவலின்படி 70 சதவீதம் சூரியகாந்தி ரபி பருவத்திலும் (நவம்பர்-மார்ச்), 30 சதவீதம் கரீஃப் பருவத்திலும் (ஜுன்-செப்டம்பர்) பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் (2011-12)ல் சூரியகாந்தி பயிரிடும் பரப்பு 13,610 எக்டேராகும், இதன் உற்பத்தி 24,622 டன்னாக இருந்தது. தமிழ்நாட்டில் சூரியகாந்தியின் உற்பத்தித் திறன்

எக்டேருக்கு 1809 கிலோ ஆகும். இது நாட்டின் சராசரி உற்பத்தித் திறனான எக்டேருக்கு 640 கிலோவைக் காட்டிலும் அதிகமாகும். சுமார் 68 சதவிகிதம் சூரியகாந்திப் பயிர் இறவையில் பயிரிடப்படுகிறது தமிழ்நாட்டில் சூரியகாந்தி சாகுபடியின் நிலப்பரப்பில் 79 சதவீதத்தையும், உற்பத்தியில் 80 சதவீதத்தையும் கரூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தூத்துக்குடி, தருமபுரி, நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்கள் பங்களிக்கின்றன. வெள்ளகோவில், மூலனூர் மற்றும் கொடுமுடி ஆகியன முக்கியமான சூரியகாந்தி சந்தை மையங்களாகும். சூரியகாந்தியின் விலை அதிகரிப்பு மற்றும் நிலக்கடலை பரப்புக் குறைவு போன்ற காரணங்கள் சூரியகாந்தி பயிரிட்ட விவசாயிகள் மத்தியில் தற்சமயம் சந்தைக்கு வரும் பயிருக்கு நல்ல விலை கிடைக்குமா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 14 வருடங்களாக நிலவிய சூரியகாந்தி விதையின் விலைகளை ஆராய்ந்தது. ஏப்ரல், மே 2014ல் ஒரு கிலோவுக்கு ரூ. 32 முதல் 33 வரை இருக்கும் என முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. தற்போது சூரியகாந்தி விதையின் விலை கிலோவிற்கு ரூ.33 ஆகும். கடந்த வருடம் அறுவடைக் காலத்தில் (மார்ச் 2013ல்) ஒரு கிலோவிற்கு ரூ.34 என்ற விலை நிலவியது. விலை ஏறுவதற்கான வாய்ப்புகள் இல்லாத படியால், அறுவடை செய்த சூரியகாந்தியை உடனே விற்பனை செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422-2431405

<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422-2450812

மக்கள் தொடர்பு அலுவலர்